RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s138

# இன்னா நாற்பதும் இனியவை நாற்பதும் கூறும் வாழ்வியல் நெறிகள்

மு. சித்ரா மனோகரி [அ,*]

[அ] தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600005, இந்தியா

# Inna Narppathu Iniyavai Narpathu Kurum Vaazhviyal Nerigal

M. Chitra Manogari [a, *]

[a] Department of Sangapalagai for Tamil Development, Chennai-600005, Tamil Nadu, India

* Corresponding Author: manogarim90@gmail.com

Received: 04-11-2020
Revised: 17-06-2021
Accepted: 19-06-2021
Published: 22-06-2021

Check for updates

## ABSTRACT

This article, entitled Inna Narppathu Iniyavai Narpathu, is the face of the innumerable ideas and philosophies necessary for the development of human society. It is an undeniable fact that the human race is supported by rich literature. The small introduction of the books should be set up and learn education in life and learn education in life, as the society that leads to the welfare of the land, the fact that the man is characterized by the fact that the man is cultivating the ground and The progressive of a society is a mistake of being configured based on the individual discipline and realizing that life is a mistake and the human race is a human race to describe the unity of the human race and describing the unity of another. The purpose of the article is to realize that the literary ideas of the human race is given literature.

**Keywords:** Inna Narppathu, Iniyavai Narpathu, Vaazhviyal Nerigal

## முன்னுரை

தமக்காகவும் தம்மைச் சுற்றியுள்ளவர்களுக்காகவும் வாழ்வதே வாழ்க்கையாகின்றது. வாழ்க்கைக்கு அடிப்படையான சிந்தனை வீச்சுக்களையும் வளர்நிலை நோக்குகளையும் பெற்று திகழ்கின்றன இலக்கியங்கள். அவ்விலக்கியங்களில் பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் இன்னா நாற்பது, இனியவை நாற்பதில் காணப்படும் மனித முன்னேற்றம் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கு தேவையான கருத்துக்களை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## இன்னா நாற்பது, இனியவை நாற்பது

பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகுப்பில் 11 அற இலக்கியங்களும், 6 அக அலக்கியங்களும், 1 புற இலக்கியமுமாக மொத்தம் 18 நூல்கள் இடம்பெறுகின்றன. இவ்வற இலக்கியங்களில் உள்ள இன்னா நாற்பது, இனியவை நாற்பது கூறும் இன்றைய காலக்கட்டத்திற்கும் மனித வாழ்விற்கு பயன்படுகின்ற கருத்துக்களை வெளிக்காட்டுகின்றது இக்கட்டுரை.

வாழ்க்கைக்கு துன்பம் தருவன இவை என்று கூறும் கடவுள் வாழ்த்துடன் கூடிய 41 வெண்பாக்களால், கபிலரால் இயற்றப்பட்ட நூல் இன்னா நாற்பது.

வாழ்வில் மனிதன் கடைப்பிடித்து வாழ வேண்டிய அறங்களை இனியவை இவை என்று கூறும் கடவுள் வாழ்த்துடன் 41 வெண்பாக்களை உடைய நூல் இனியவை நாற்பது. இந்நூலைச் செய்த ஆசிரியர் பூதஞ்சேந்தனார். மக்கள் நலம் பெற்று வாழ்வதற்கான நல்லறங்களைக் கூறுகின்றன. மனித

குலத்தின் மேன்மைக்கு செய்யக் கூடாதன இவை எனவும் செய்யக் கூடியவை இவை எனவும் நான்கடிச் செய்யுளில் எடுத்து இயம்புகின்றன இவ்விருநூல்களும்.

## அறம்

அறம் என்பது நீதி என்பதன் அளவினதன்று. அது சமுதாயத்தில் உருவாகும் ஓர் இயற்கைப் பேராற்றல் ஆகும். அறம் முழுமைப் பெற வேண்டுமெனில் மனம், மொழி, மெய் என்ற மூன்றும் இணைந்த நிலையில் செயலாற்ற வேண்டும். இந்த ஒருமைப்பாட்டை அடித்தளமாகக் கொண்டு இன்னா நாற்பதும் இளியவை நாற்பதும் கூறும் அறக்கருத்துகள்

"........................................ வின்னா

பெருவலியார்க் கின்னா செயல்"

பிறருக்கு நன்மை செய்ய இயலாவிட்டாலும் ஒருவருக்கும் தீங்கு செய்தல் இன்னாத ஒன்று என கூறுகின்றது மேற்சொன்ன அடி (Shanmugam Pillai, 1996).

"இன்னா கழிப்புவாய் மண்டிலங் கொட்பு"

சினம் என்பது தன்னையும் பிறரையும் சேர்த்து அழிக்கும் (Shanmugam Pillai, 1996). அச்சினம் துன்பத்தையே தரும். இவ்வடிகளுக்கு இணையான கருத்தைக் கூறும்

"கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு

ஆற்றாதார் இன்னா செயல்"

குறளின் கருத்தும் எண்ணத்தக்கது (Meiyappan, 2012).

"அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே"

"பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்

திரிபின்றி வாழ்தலினிதே"

மேற்சொன்ன இனியவை நாற்பதின் அடிகளும் அறத்தின் வழி மனிதன் வாழவேண்டும் என்பதை கூறுகின்றது (Venkadasamy Nattar, 2007). இவ்வடிகளுக்கு உறுதி சேர்க்கும் வகையில்

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்

புறத்த புகழும் இல"

அறத்தால் வரும் புகழைவிட இன்பம் உலகில் ஒன்றும் இல்லை என்பதை குறளும் உணர்த்துகின்றது (Meiyappan, 2012). சமூகத்தின் கட்டுக்கோப்பைக் கட்டிக்காக்க சட்டதிட்டங்கள் தோன்றினாலும் அவை மனிதனைக் கட்டுப்படுத்த முடியுமேயொழிய அவனை உளப்பூர்வமாக மாற்ற இயலாது. அம்மாற்றத்திற்கு அறத்தைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும் என்று நீதிநூல்கள் கூறுகின்றன.

## கல்வி

கல்வி வாழ்வில் ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. மனிதர்களின் அறிவை வளர்ச்சியை நோக்கிச் செயல்படுத்தும் நம்பிக்கை ஊற்று கல்வி. பதினெண் கீழ்க்கணக்கு தொகுப்பில் உள்ள 'நீதிநூல்கள்' அனைத்துமே கல்வியின் இன்றியமையாமையை எடுத்துக் கூறுகின்றன. அவ்வகையில் இன்னாவும் இனியவையும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

"குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னா"

"ஆங்கின்னா கல்லாதான் கோட்டி கொளல்"

கல்வியறிவு இல்லாதவன் 'பேதை' என்றே இவ்வடிகள் சொல்லிச் செல்கின்றன (Shanmugam Pillai, 1996).

"பிச்சைபுக் காயினுங் கற்றன் மிகவினிதே"

"நாளு நவைபோ கான் கற்றன் மிகவினிதே"

பிச்சையெடுத்துண்டாயினும் கற்றல் மிக இனியது என்று இனியவை நாற்பது கூறுகின்றது (Subramanian, 2010).

"கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே"

கல்வியின் மகத்துவத்தை உணரவைக்கும் ஔவையின் கூற்றும் இங்கு நோக்கத்தக்கது. கல்வியே ஒருவனின் தகுதியை நிர்ணயிக்கும் துலாக்கோல் ஆகும். ஒரு மனிதனை பண்படைய வைப்பது கல்வியே. வாழக்கை நடத்தத் தேவையான திறங்களைப் பெறவும், நல்ல பண்புடன் வாழவும், சமூகக் கடமைகளை மேற்கொள்ளவும், சூழ்நிலையை உணர்ந்து அதற்கேற்ப செயலாற்றவும் கல்வி நம்மை செம்மைப்படுத்துகின்றது. மேலும், திருக்குறளானது கல்வியின் முக்கியத்தை உணர்த்த இரண்டு அதிகாரங்களில் 20 குறள்களின் மூலம் எடுத்துச் சொல்வதை உணர்வேண்டும்.

## அரசியல்

மக்களை வழிநடத்தி செல்லும் அரசு நல்வழியில் சென்றால் மட்டுமே சமூகமானது உன்னத நிலையை அடையும் என்பதை உணர்த்த அக்காலம் தொட்டே இலக்கியங்கள் நம்மை அறிவுறுத்துகின்றன. அரசு தன் நலனுக்காக மட்டுமன்றி மக்களின் நலனுக்காகவும் சமுதாய மேம்பாட்டிற்காகவும் மூடத்தனத்திலிருந்து விலகி மக்களுக்கு இறைவனைப் போல் செயல்பட வேண்டும் என்பதை இன்னாவும் இனியவையும் கூறுவதை ஆராய்க.

"கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா"

"முறையின்றி யாளு மரசின்னா"

முறைதவறி ஆளும் அரசின் கீழ் வாழும் குடிமக்களின் நிலையை உணர்த்தும் இவ்வடிகள் ஆழ்ந்த கருத்தை நமக்கு நல்குகின்றன (Venkadasamy Nattar, 2007).

"செங்கோலனாகுத லெய்துந் திறத்தாலினிதே"

"பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே"

மக்களின் பேரன்பைப் பெற்று ஆளும் அரசே நிலைத்து நிற்கும் என்பதை மேற்சொன்ன இனியவையின் அடிகள் நமக்கு உணர்த்துகின்றது (Subramanian, 2010). வாழும் காலம் மட்டும் அல்லாமல் வாழ்விற்கு பிறகும் நிலைத்து நின்று அரசின் பெருமையை உணர்த்திய மன்னர்களை நாம் அறிவோம். அவர்களின் கூற்றுபடியும், நீதி கூறும் நூல்களின் வழியும், வாழ்வையும் நாட்டையும் பேணிக்காக்க வேண்டும். திருவள்ளுவர் ஓர் அதிகாரத்தை அல்லாது ஒரு பிரிவையே ஒதுக்கி 700 குறட்களில் அரசின், அரசனின் நிலையை நமக்கு உணர்த்தும் நோக்கில் இருந்தே, உடலுக்கு உயிர்போன்றத மக்களுக்கு அரசு என்பதை அரசும், மக்களும் உணர்ந்து செயலாற்ற வேண்டியதை உய்த்து அறியமுடிகிறது.

## விவசாயம்

வாழ்விற்கு ஆதாரம் தொழில். ஒரு நாடு வளமை அடையவும், ஒரு தனிமனிதன் வளமை அடையவும் விவசாயம் செழிக்க வேண்டும். வேளாண்மை என்பது சங்க காலத்தில் மட்டுமின்றி

சமகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் பயன் உள்ளதாகத் திகழ்பவை என்பதை இன்னா நாற்பதும் இனியவை நாற்பதும் நம் கண்முன் எடுத்துக் கூறுகின்றது.

"எருதி லுழவர்க்குப் போகீர மின்னா"

"ஆங்கின்னா மூரி யெருத்தா உழவு"

விவசாயத்திற்கு அடிப்படை நிலம், நீர், சூழல், பருவம், எருது, விதை போன்றவை. அவற்றைக் கொண்டே விவசாயம் தளைத்தோங்குகின்றது. அதன் ஆதாரத்தின் முக்கியத்துவத்தை மேற்கண்ட அடிகள் சொல்லிச் செல்கின்றன (Shanmugam Pillai, 1996).

"யேருடையான் வேளாண்மை தானினிது"18

"எத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்

கற்றா வுடையான் விருந்து"

கால்நடைகளை விவசாயத் தோழனாகப் பயன்படுத்தியுள்ளனர் நமது முன்னோர்கள் (Subramanian, 2010). உணவும், உணவை உற்பத்தி செய்யும் விவசாயமும், விவசாயத்திற்கு அடிப்படையானவையும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எல்லா நீதிநூல்களும் உரைக்கின்றன. அந்த வகையில் இனியவை நாற்பதும் பயிர்த்தொழிலின் அவசியத்தை உணர்த்துகிறது. உலகில் வாழ்கிற மனிதகுலத்திற்கு விவசாயம் எத்தகைய முக்கியத்துவம் வதய்ந்தது என்பதை வெளிப்படுத்தியவன் தமிழன். தமிழனின் நெல் நாகரிகம் உலகில் முதன்மையானது. அப்படிபட்ட நம் விவசாயத்தை உயிர்ப்பிப்பது நம் தலையாயக் கடன் என்பதை உணர்ந்து எல்லோரும் செயல்படுவோம்.

## பிறன்மனை

பிறிதொருவரின் இல்லத்தின் கண் சென்று அவர் மனைவியுடன் சேர்தல் என்பது தவறான செயல் ஆகும். பிறர் மனைவியை நெருங்க நினைக்கும் எண்ணம் என்பதே தவறானது. அறிவாலும், கல்வியாலும், செல்வத்தாலும், சிறந்தவனாக இருந்தாலும் பிறர் மனைவியின் தோள்களைத் தழுவும் ஒருவனை 'பேதை' என இன்னா நாற்பது உரைக்கிறது.

"பிறன் மனையாள் பின்னோக்கும் பேதைமை யின்னா"

"அறன் கடைப்படாத வாழ்க்கை"

"பிறன் கடைநின் றொழுகுவானும்"

மேலுள்ள இவ்வடிகள் எல்லோரிலும் கடையானவனாகப் பிறன் ஒருவன் இல்லாள் தோள்களைச் சேர்ந்தவன் இருப்பான் என்பதை வலியுறுத்துகின்றன (Venkadasamy Nattar, 2007). வள்ளுவரும் இச்செயலை மிகவும் கடிந்துள்ளார். சங்ககாலம் தொட்டு இன்றுவரையிலும் இச்செயலால் அழிந்த மன்னர் முதல் நாடுவரை நாம் அறிந்த ஒன்றே. இன்று நடக்கும் பல குற்றச் செயல்களுக்கு இதுபோன்ற தவறான நடத்தையே காரணம் என்பதை நாம் கண்கூடாக காணும் நிகழ்ச்சியே. தவறான செயல்கள் ஒரு தனிமனிதனை மட்டுமல்லாமல் அவனைச் சார்ந்த சமூகத்தையே பாழ்படவைக்கும் என்பதை அறிவார்ந்து சிந்தனைச் செய்து வாழ்வோம்.

## நிலையாமை

மனித உடலானது மழையில் தோன்றி மறைகின்ற நீர்க்குமிழி போன்றதாகும். அந்நிலையற்ற யாக்கையையும் அவற்றின் ஆசையையும் நிறைவேற்ற மனிதன் பல எண்ணற்ற தவறுகளைச் செய்கிறான். கொலை, களவு, சூது, மது, மாது எனப் பல தீயவைகளைப் புரிகின்றான். நிலையற்ற வாழ்வை உணர்ந்து வாழும் வாழ் நாளில் நல்லவற்றைச் செய்து வாழ வேண்டும் என நிலையாமையைக் குறித்து இனியவை நாற்பது எடுத்து கூறும் அறக்கருத்துக்கள்.

“மாணாதா மாயினிலையாமை நோக்கி”

போன்ற வரிகளும் நிலையாமையை அறிவுறுத்துகின்றன (Subramanian, 2010). மேலும்,

“நந்த வனத்திலோ ராண்டி - அவன்

நாலாறு மாதமாய் குயவனை வேண்டி

கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்

கூத்தாடி கூத்தாடிப் போட்டு உடைத்தாண்டி”24

இவ்வடிகள் நிலையாமைக் குறித்து பேசும்போது எல்லோர் நினைவிற்கும் வரும். இவை கூறும் உள்ளார்ந்த கருத்தை நாம் அறிந்து பண்படுவோம்.

## முடிவுரை

அறம் வெல்லவும், பாவம் தோற்கவும், வாழ்வில் அன்பும் அறனும் தழைக்கவும் அறிவார்ந்த சிந்தனைகளை இலக்கியங்கள் வழங்கியுள்ளன. மனித உள்ளத்தைத் திறப்பதற்கும், அதை செம்மைப்படுத்துவதற்கும், நல்லனவற்றை மேற்கொள்வதற்கும், அவற்றைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதற்கும், பிறரை நல்வழியில் செலுத்துவதற்கும், மனித வாழ்வைப் பண்படுத்தும் இல்வாழ்வியல் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டது இன்னா நாற்பது, இனியவை நாற்பது. இவற்றின் நோக்கம் மனித சமுதாயமே தழைத்தோங்கி வாழ்வாங்கு வாழ்ந்து, சிறப்புறவே என்பதை உணர்ந்து, இவை நமக்கு நல்கும் இன்னமுதை பருகி செழித்தோங்குவோம்.

## References


Meiyappan, S., Tirukkural Moolamum Parimelalakar Uraiyum, Manivaasagar Pathippagam, Chennai, India.

Shanmugam Pillai, M., (1996) Pathinenkil Kanakku-1, Mullai Nilayam, Chennai, India.

Subramanian Sa.Ve., (2010) pathinenkilkanakku Noolkal (Mulamum Uraiyum), Manivaasagar Pathippagam, Chennai, India.

Venkadasamy Nattar, Na. Mu., pathinenkilkanakku (Mulamum Uraiyum), Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.



**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License